# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2053/16 - 2018 ජනවාරි මස 09 වැනි අඟහරුවාදා - 2018.01.09

**2053/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I - தொகுதி (I) பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### நாணய விதிச் சட்டம்

*நாணய விதிச் சட்டம், (அத்தியாயம் 422) பிரிவு 32 ஈ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்*

*முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி,*
*தலைவர்*
*நாணயச் சபை*

*கொழும்பு,*
*2018, சனவரி 05.*

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்**
**2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

*1. எடுத்துக்காட்டல்*

*1.1 இந்த ஒழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்பட வேண்டும்.*

*2. மூல ஒழுங்கு விதியில் திருத்தங்கள்*

*2.1 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதியிடப்பட்ட 1673/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*ஒழுங்குவிதி 5.1 இற்கான பதிலீடு*

*2.2 ஒழுங்குவிதி 5 இல் பந்தி 5.1 நீக்கப்பட்டு அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.*

*'5.1 காப்புறுதி செய்யப்படுவதற்கான வைப்புக்களானது, அனைத்துக் கடன்பாட்டுக் கருவிகளும் நீங்கலாக அங்கத்துவ நிறுவனங்களினுடைய கேள்வி, கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள் மற்றும் 2012.01.01 இற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட வியாபார மீள்கட்டமைப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக 2010 மற்றும் 2011 இல் நாணயச் சபையின் பணிப்புரைகளின் கீழ் பங்குரிமை மூலதனமாக மாற்றப்பட்ட வைப்புக்களின் ஆரம்ப வைப்பாளர்களாகவிருந்து பின்னர் பங்குதாரரானவர்களின் பங்குகளின் பெறுமதி '.*



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்நோக்கத்திற்காக, பங்குரிமை, மூலதனமாக மாற்றப்பட்ட வைப்புக்களின் உடமையாளர்களான பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி என்பது பங்குகளாக மாற்றப்பட்ட வைப்பு /வைப்புக்களின் பெறுமதியாகும்.

ஒழுங்குவிதி 9.6 இற்கான பதிலீடு

2.3 ஒழுங்குவிதி 9 இல் பந்தி 9.6 நீக்கப்பட்டு அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது:

'9.6 வைப்பாளர் ஒருவருக்குச் செலுத்தப்படும் நட்ட ஈட்டுத் தொகை 600,000 ரூபாவுக்கு மேற்படும் பட்சத்தில், ஆகக்கூடிய மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட தொகை 600,000 ரூபா அல்லது வெளிநாட்டு நாணய பண வைப்பாக இருப்பின் அதற்குச் சமனான தொகை என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட விதத்தில் கணிக்கப்படும்'.

ஒழுங்குவிதி 10.1 இற்கான பதிலீடு

2.4 ஒழுங்குவிதி 10 இல் பந்தி 10.1 நீக்கப்பட்டு அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் பதிலீடு செய்யப்படுகிறது:

'10.1 நாணயச் சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்பட்ட பணிப்புரைகள்/ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கை நியதிகளின் அடிப்படையில் செயற்பாட்டு முகாமைத்துவ ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக, தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் வைப்புக் காப்புறுதிப் பிரிவு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் நிறுவப்பட வேண்டும்.'

3. நடைமுறைக்கு வரும் திகதி

3.1 இத்திருத்தங்கள் 2018 ஆம் ஆண்டு சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

01-632

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.